BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# இருளர்இன மக்களின் நவீன வாழ்வியல் மாற்றங்கள்

ரா. சிவானந்தம்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.
**மின்னஞ்சல்:** rr.sivanantham2001@gmail.com
நெறியாளர்: **முனைவர் மு. கவிதா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**ஆய்வுச் சுருக்கம்**

இருளர்இன மக்கள் தமிழ்நாட்டின் தொல்குடி இனங்களில் முக்கியமானவர்களாக் கருதப்படுகின்றனர். பாரம்பரியமாக வேட்டையாடுதல், காடுகளைச் சார்ந்த வாழ்வாதாரம், மூலிகை மருத்துவ அறிவு மற்றும் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வந்தனர். காலப்போக்கில் கல்வி, நகரமயமாக்கல், அரசின் நலத்திட்டங்கள், தொழில்நுட்பவளர்ச்சி, தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் சமூக மாற்றங்கள் ஆகியவற்றின் தாக்கத்தால் இவர்களின் வாழ்வியல் முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போதைய நிலையில் கல்வி, வேலைவாய்ப்பு, வீட்டுவசதி, சுகாதாரம், சமூகப் பழக்கவழக்கங்கள், பொருளாதார நிலை மற்றும் பண்பாட்டு அடையாளங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அதே நேரத்தில், தங்களின் மரபு மற்றும் பண்பாட்டை எவ்வாறு பாதுகாத்து வருகின்றனர் என்பதையும் இவ்வாய்வு ஆராய்கிறது. மேலும், நவீன வாழ்க்கை முறையால் ஏற்;பட்ட நன்மைகள் மற்றும் சவால்களையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

**ஆய்வுச் சுருக்கம்:** திருமணம், இறப்பு, தொழில், ஒப்பனை, உணவு, கல்வி

## முன்னுரை

நீலகிரி மலையில் பல்வேறு வகையான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அவற்றில் குறிப்பிட்டத்தக்கவர் இருளர்இன மக்கள். இருளர்களின் வாழ்வியல் பழங்காலங்களிலிருந்து நவீன காலகட்டத்திற்கு ஏற்ப பல மாற்றங்களும் முன்னேற்றங்களும் அடைந்துள்ளது என்றே கூறலாம். இருளர் இன மக்கள் வாழ்வில் உள்ள கல்விநிலை, சடங்குமுறைகள், பிறப்பு, உணவு முறைகள், தொழில், திருமணம், மற்றும் இறப்பு போன்றவற்றில் இந்த நவீன காலகட்டத்திற்கு ஏற்ப பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவர்கள் பிற இன மக்களுடன் பல வழிகளில் ஒன்றி வாழ்வதால் அவர்களுடன் ஒரு சில நவநாகரிக முறைகளைப் பின்பற்றி வாழ்கின்றனர். இருளர் இனத்தில் மிக முக்கியமான தினம் அமாவாசை ஆகும். இவர்களின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அமாவாசை தினம் அன்று நடைபெறும். தற்பொழுது இவற்றில் சில நிகழ்ச்சிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இம்மாற்றத்திற்கான சமூகக் காரணிகளை இங்கு அறியமுற்படலாம்.

## ஆய்வு நோக்கம்

இருளர்இன மக்களின் பாரம்பரிய மற்றும் நவீன வாழ்வியல் முறைகளை ஒப்பிட்டு ஆராய்வது. கல்வி, தொழில், பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்வது. அரசின் நலத்திட்டங்கள் இருளர் இன மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கத்தை ஆய்வு செய்வது. நவீனமயமாக்கலால் இருளர்இன மக்களின் பண்பாடு, மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டறிவது. இருளர்இன மக்களின் தற்போதைய வாழ்க்கைச் சவால்கள் மற்றும் முன்னேற்த்திற்கான பரிந்துரைகளை முன்வைப்பது.

## மாற்றத்திற்கான காரணிகள்

இருளர்இன மக்கள் நீலகிரியை மட்டுமே இருப்பிடமாகக் கொண்டு விளங்குகின்றனர். இந்த நவீன காலகட்டங்களில் அவர்கள் தங்கள் தொழில், கல்விக்கு என்று வெளியே சென்றாலும் இறுதியில் தங்களது வாழிடமான மலையின் உயரமான பகுதிகளில் உள்ள மந்துக்களுக்கு

வந்து விடுகின்றனர். மற்ற பழங்குடியினர் இந்த காலகட்டத்தில் நாகரிகத்தின் வளர்ச்சியால் பொருளாதார வசதிகளுக்கு ஏற்ப நீலகிரியிலிருந்து சென்று மற்ற மாவட்டங்களுக்கு குடியேறிவிட்டனர். இருளர்இன மக்கள் மட்டுமே தங்களது இருப்பிடங்களை நீலகிரியில் அமைத்து நவீன வாழ்கின்றனர். இம்மக்கள் மாற்றங்களுக்கேற்ப பழக்கவழக்கங்கள் உடை ஒப்பனை முறையில் தங்களை மாற்றிக் கொண்டாலும், தங்களது இருப்பிடங்களை மாற்றிக் கொள்ளாமலே உள்ளனர் என்பது சிறப்புக்குரியது.

**பழங்குடி மக்கள் முன்னேற்றத்தின் வழிகாட்டி**

"பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடையாத கால கட்டத்தில் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக டாக்டர். நரசிம்மன் அவர்கள் இருந்தார். அவர் கோத்தகிரியில் 1940 - ல் மருத்துவப் பணியைத் தொடங்கினார். சென்னையில் படிப்பிற்கான பணியை மட்டுமன்றி, ஆயுர்வேத மற்றும் ஆங்கில அலோபதியிலும் பயிற்சி முடித்து கோத்தகிரியில் சிறு அளவில் மருத்துவப் பணியைத் தொடங்கி நடத்தி வந்தார். அங்கிருந்தே அங்குள்ள மக்களுக்கு உதவி செய்து வந்தார். வசதி இல்லாதவர்களுக்கு இலவசமாக மருத்துவம் பார்த்ததோடு அவர்களுக்கு உதவி புரிய முழுநேர இலவச மருத்துவ சேவையாக அமைந்த ஒரு சூழலே குறும்பர் இனப் பெண்ணின் பிரசவம். 1942 - இல் பல மைல் கல் தொலைவில் நடந்து சென்று அந்தப் பெண்ணிற்குப் பிரசவம் பார்த்து பிழைக்க வைத்திலிருந்து சிறிது சிறிதாக ஆரம்பித்து 'நீலகிரி ஆதிவாசிகள் நலச்சங்கம்-1958" அன்று தொடங்கியச் சங்கத்தின் மூலம் தனியார் மற்றும் அரசின் அனைத்து நலத்திட்டங்களும் பழங்குடி மக்களுக்குச் சென்று சேர்கின்றன."[1]

**சடங்கு முறைகளில் ஏற்பட்டு நவீன மாற்றங்கள்**

"இருளர்களின் சடங்குமுறைகளின் தீட்டு கழிவதற்கான நாளாக அமாவாசை தினம் குறிக்கப்படுகிறது. அத்தினம் முடிவடைந்ததால் அனைத்து தீட்டுகளும் கழிந்ததாகக் குறிக்கப்படுகிறது. தற்பொழுது பிரசவ சமயத்தின்போது தீட்டுக் கழிக்கும் குடிசைகள் அமைக் கப்படுவது, மற்றும் குழந்தை பிறக்கப்போகும் பெண் அந்த குடிசையில் அமர்த்தப்படுவது இல்லை. அதற்கு மாற்றாக பிரசவத்திற்கு உரிய பெண் தான் வாழும் இடத்திலிருந்து மற்றொரு இடத்தில் தங்க வைப்பதோடு குறைந்த நாட்களில் தன்னுடைய இடத்திற்கு அழைத்து வரப்படுகிறாள். பழைய முறையிலான பிரசவத்திற்காக அமைக்கப்படும் எந்தக் குடிசையும் தற்பொழுது எந்த இடத்திலும் காணப்படவில்லை. நாகரிகம் வளர்ந்த காலக்கட்டங்களில் தற்பொழுது பிரசவத்திற்கு அரசுமருத்தவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளை அம்மக்கள் நாடுகின்றனர்."[2]

**பாலிய திருமண முறையில் மாற்றங்கள்**

'கிறித்துவ முறை திருமணம்'

"இருளர்களில் ஒரு சாரார் கிறித்துவ மதத்தைத் தழுவியதால் தங்கள் திருமணங்களை கிறித்துவ ஆலயங்களில் பாதிரியார்கள் முன் நடத்திக்கொள்கின்றனர்.ஞாயிறு தோறும் கோயிலுக்குச் செல்லுதல் ஆலயங்களில் நடைபெறும்வேறுசில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல் போன்ற பழக்கவழக்கங்களாலும், நடைமுறைகளினாலும் நாகரிக முறை போதிக்கப்பட்டு இந்து இருளர்களின் ஏனைய வாழ்க்கை முறைகளினின்று கிறித்துவ மதத்தைத் வாழ்க்கை தழுவிய இருளர்களின் வாழ்க்கை முறை வேறுபட வாய்ப்பு ஏற்படுகிறது."[3]

**சிறுவர்களுக்கான பள்ளியும், பாலியத் திருமண முறையில் மாற்றங்களும்**

இருளர்களின் குடியிருப்புகளுக்கு அருகாமையில் அரசினரால் உறைவிடப் பள்ளி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதே போல் ஒவ்வொரு இடத்திற்கு அருகிலும் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிறு குழந்தைகள் படித்தும், அத்தோடு தொடர்ந்து படிக்க வாய்ப்பும் அமைகின்றது. தம் இனத்துத் இருளர்களுள் ஒரு சாரார் கிறித்துவ மதத்தைத் தழுவி நாகரிமாய் வாழ்கின்றமையால், தாங்கள் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டு முன்னேற உந்துதல் உணர்வு ஏற்படுகிறது.



களஆய்வில் ஆய்வாளர்

இதனால், சில குழந்தைகள் மேற்கொண்டு தொடர்ந்து படித்து வேலைவாய்ப்பை மேற்கொள்கின்றனர். இக்கல்வி முறைகளின் பயன் நீலகிரிக்குச் சுற்றுலா பயணிகளாக வந்து போகும் நாகரிகமான பலரின் வாழ்க்கைத் தரங்கள் கற்பித்துக் கொடுக்கின்றன. மேற்கண்ட காரணங்களால் பாலிய திருமணமுறை மெதுவாக மாறி வருகின்றன.

**இறப்புச் சடங்கு முறையில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்கள்**

இருளர்களின் இறப்புச் சடங்கின் போது பல்வேறுமலை முகடுகளில் வாழும் இருளர்கள் அனைவரும் வந்து கலந்து கொள்கின்றனர். ஒருவரின் இறப்புச் சடங்கின் போது எத்தனை எருமைகள் வெட்டப்படுகின்றன என்பதனைப் பொறுத்துத் இருளர் சமூகத்தின் சொத்து மதிப்பீடு தீர்மானிக்கப்படுகிறது. 348 ஒருவர் இறந்தால் அந்தச் சாவுச் செய்தியை எல்லா இடங்களிலும் வாழும் இருளர்களுக்கும் தெரிவிக்க போதிய வாகன வசதி இன்மையால் மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை வைத்திருக்கும் சூழல் தற்போது அனைத்து இடங்களுக்கும் சிறிய அளவு கொண்ட பேருந்துகள் மற்றும் தொலைபேசி உள்ளதால் செய்தியை எளிதாகக் கொண்டு செல்லப்படுவதால் ஒரு நாளே வைத்து எடுத்து எரித்து விடுகின்றனர். 'அதேபோல இறந்தவர்களுக்காக எருமையினைப் பலியிடுவது குலச்சடங்கு என்றாலும் (08.11.86) இல் கார்ஸ் மந்து இளைஞர்கள் தோற்றுவித்தப் போராட்டத்தின் மூலம் எருமையினை பலியிடுவது குறைந்து விட்டது எனலாம். மேலும் அந்த இறப்புச் சடங்கிற்கான எருமையினை பலியிடுவதற்கு மாறாகக் காட்டுக்குள் ஓட்டி விடப்படுகிறது"[4]

'இதைபோன்ற ஆட்டங்களில் முதியோர் இறப்பின் போது, ஆட்டங்கள் காணப்பட்டு இருந்தன. தற்போது இளைஞர்கள் படித்திருப்பதாலும், அரச வேலையில் இருப்பதாலும் இளைஞர்கள் சமூக மதப்பு கருதி தங்கள் இனத்தின் பழமையான ஆட்டத்தை இறப்பின்போது ஆடுவதற்கு முன்வரத் தயங்குகின்றன. மேலும், வெகுசன ஊடகத்தில் வெளியாடும் கலைகளையும் பிற நிகழ்த்துக் கலைகளிலும் பங்கேற்று ஆடுகின்றன என்பதன் இன்றும் வளர்ந்து வருகின்றனர்."[5] கிறித்துவ மூலம் தங்களது பாரம்பரிய ஆட்டக்கலைகள் மதத்தைத் தழுவிய இருளர்களின் இறப்புச் சடங்குகள் பாதிரியார் உள்ளிட்ட நிலையில் சிலுவைக் கம்பு செய்யப்பட்டும், கிறித்துவ முறைப்படி அடக்க ஆராதனை நடைபெறுகின்றன.

வீட்டின் அமைப்பு முறைகளிலும் பல முன்னேற்றங்கள் அடைந்துள்ளன. பல அறைகள் கொண்ட அழகான வீடுகளை இவர்கள் தற்காலத்தில் கட்டியுள்ளனர். பெண்கள் பெரும்பாலும் சாண எரிவாயு மற்றும் மின் அடுப்புகளையே இன்றைய காலகட்டத்தில் பயன்படுத்தி வருகின்றனர். வீட்டின் சுவர்கள் மற்றும் தரைகள் போடப்பட்டுள்ளது. மேற்கூரைகள் அதிகமாக கான்கீரிட், மற்றும் ஓடுகளால் வேயப்பட்டு உள்ளன. வீட்டின் உள்ளே கட்டில், மேசை, நாற்காலி, மெத்தை போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். பொழுது போக்கிற்காக பெரும்பாலும் அனைத்து வீடுகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் காணப்படுகின்றன.

**பொழுது போக்கு நிகழ்வுகள்**

பெண்களுக்கான வீடுகளில் தொலைக்காட்சி மற்றும் ஆடையில் உல்லன் வேலைபாடு செய்வதும், ஆண்களில் இளைஞர்கள் கால்பந்து, கைபந்து, கூடைபந்து, மட்டைப்பந்து, கபடி போன்ற அனைத்து விளையாட்டுகளையும் விளையாடுவதோடு ஆண்கள் பல விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றனர். அம்மக்கள் தங்கள் இன மக்களின் இளைஞர்கள் சேர்ந்து அணியை உருவாக்கி பல விளையாட்டு நிகழ்வில் பங்கேற்கின்றனர் என்பது நவீன தாக்கத்தின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது என்றே கூறலாம்.

**உணவு முறையிலான நவீன மாற்றங்கள்**

எருமைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் இருளர்கள் பாலிலிருந்து கிடைக்கும் வெண்ணெய் போன்ற உணவு வகைகளை மட்டுமே விரும்பி உட்கொண்ட நிலைமாறி, தற்போது எல்லா வகையான உணவுகளையும், உண்கின்றனர். பெண்கள் அதிக அளவில் சமைக்காததால் இயற்கை உணவுகளை எடுத்துக் கொண்ட நிலை மாறி இன்றைய காலக்கட்டங்களில் பெண்கள் மேல்நாட்டு உணவு வகைகளையும் திறம்படச் சமைக்கின்றனர். தற்பொழுது இருளர்கள் உருளை, முட்டைகோஸ், காலிபிளவர், கேரட் மற்றும் பருப்பு அனைத்து வகைகளையும் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்கின்றனர் என்றாலும் இன்னும் சில மந்துக்களில் பால்சோறு பாரம்பரியத்தோடு கடைபிடித்து வருகின்றனர்.

இன்றைய காலகட்டத்திலும் பால் சார்ந்த உணவுப் பொருட்கள் அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்கின்றனர். பால், மோர், இம்மக்களின் கோவிலுக்கென்று தனி எருமைகளும், வீட்டுக்கு என்று தனி எருமைகளும், புழக்கத்தில் பயன்படுத்துகின்றனர். புனிதத் தன்மையுடையது. இன்றளவிலும் மாற்றம் இருக்கிறது.

**உடை ஒப்பனை முறையில் நவீன மாற்றங்கள்**

இருளர்இன ஆண்கள் மற்றும் பெண்கள் பு+த்துக்குளி என்ற ஆடையையே அணிகின்றனர். எனவே,இருளர்களைப் போர்வை மனிதர்கள் என்றே கூறலாம். வயதான ஆடவர் கையில் கைத்தடி ஒன்றை வைத்திருப்பர். பெண்கள் தங்கள் முடியைக் கைவிரலால் சுருட்டித் தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் வழக்கம் இன்றைய காலகட்டங்களில் திருவிழா மற்றும் திருமணங்களில் மட்டுமே காணமுடிகிறது.

அதே போன்று இன்றும் முதியவர்களிடம் மட்டும் பழைய உடையும், ஒப்பனை முறைகளையும் காணமுடிகிறது. தோடர் சமூக இளைஞர்கள் பேண்ட், சட்டை, கோட் என்று தங்கள் உடையை நாகரிகக் காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்கின்றனர். பெண்கள் விழா மற்றும் திருமண நிகழ்ச்சிகளிலும் புடவை மற்றும் நாகரிக உடைகளை அணிகின்றனர். குளிருக்கு ஏற்றவாறு உல்லன் மற்றும் கம்பளியால் செய்யப்பட்ட ஆடைகளை அணிகின்றனர். மேலும் பெண்கள் நகர்ப் புறங்களுக்குச் செல்லும் பொழுது, தமிழர் போன்று ஆடை, அணிகலன்கள் அணிவது இருளர்களின் உயர்ந்த நிலையைக் காட்டுகிறது. ஆண்களும் இவ்வாறே உடை அணிகின்றனர்.

இருளர்களில் ஒரு சில இளைஞர்கள், வயதுள்ள பெண்கள், சிறுவர்கள், சிறுமியர்கள் ஆகியோர் திருமணச் சடங்குகளின் போது. 'பு+த்துக்குளி" என்ற பாரம்பாரிய ஆடையைப் போர்த்துவது இல்லை. இது அவர்கள் வெளிஉலகத்தோடு கொண்டு உள்ள கலாச்சார மாறுபாட்டைக் காட்டுகின்றது. தொழில் முறையில் நவீன மாற்றங்கள்நீலகிரி மலையின் மக்களில் 1374 பேருக்கு மேல் வேலை தேடுபவர்களாக உள்ளனர். வேலை தேடும் சிலர் பெரும்பான்மையோர் 10 ஆம் வகுப்பு வரை படித்தவர்களாக உள்ளனர். இவர்களுள் ஆடவர்களே எண்ணிக்கையில் அதிகம் உள்ளனர். நீலகிரி மலையின் மேல் இதுவரை அரசு (மாநிலப்)பணியில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

உதகமண்டலத்தில் 'இந்துஸ்தான் புகைப்படச் சுருள் நிறுவனம்" குன்னூரைத் தாண்டி உதகைச் செல்லும் வழியில் உள்ள 'வெடி மருந்து தொழிற்சாலை" ஆகியவை மத்திய அரசின் தொழிற்சாலைகள் ஆகும். இதில் இம்மலையின மக்கள் பலர் ஆடவர், பெண்டிர் என வேலை செய்கின்றனர். இவை தவிர தனியார் நிறுவனங்களாக தேயிலை, காப்பித் தோட்டத் தொழிற்சாலைகள் எனப் பல தொழில்கள் உள்ளன. இவற்றில் கணிசமான அளவுக்கு மலையின மக்கள் வேலை செய்கின்றனர்.

தொழிற்சாலைகளில் ஏற்படும் சிக்கல்களைக் களைந்தெரிய ஏனைய சக தொழிலாளர்களோடு இன்று உண்ணாவிரதம், ஊர்வலம், போராட்டம் போன்ற கூட்டு நடவடிக்கைகளில் தங்களையும் இணைத்துக் கொண்டு இவ்இருளர் இனத் தொழிலாளர் வர்க்கம் எனும் இனமாகப் பரிணமித்து வளர்ந்து வருவதை இன்று வரை காணமுடிகிறது.

**பெண்கல்வி நிலை மற்றும் சுயதொழில் முறை**

பரந்த நீலகிரி மலைப் பசுமைப்பகுதிகள் முன்பொரு காலத்தில் குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட இருளர் இனத்தாருக்குச் சொந்தமாக இருந்தன. இன்று அரசின் சொத்துக்களாகவும், தனியார் சொத்துக்களாகவும் அவை விலை பேசப்பட்டுள்ளன. சொத்துரிமை, உடைமை பற்றிய கருத்துக்கள் மக்களிடையே உருவாகியுள்ளன. எனவே தற்பொழுது ஒருவனுக்கே ஒருத்தி என்னும் உரிமை உருவாகி வருகிறது. அதுமட்டுமன்றி இயங்கியும் வருகிறது.



களஆய்வில் ஆய்வாளர்

“முந்தைய காலகட்டத்தில் சமூக அளவிலான உற்பத்தியில் தமக்கான பங்கை ஆற்ற முடியாதபடி பெண் பின் வைக்கப்பட்டிருந்ததோடு, அவள் குடும்பத்தின் வருவாயை ஈட்டுபவனான ஆண் இருந்தால், ஆணைச் சார்ந்தே இயங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தாள்.பொருளாதாரம் மற்றும் வற்புறுத்துதலால் பெண் தனது பாலியல் நிலையையும் இன விருத்திக்கான பங்கு பற்றுதலை மட்டுமே பெண் தள்ளப்படுகிறாள் என்பது மாறி இன்றைய காலகட்டங்களில் பெண்கள் அதிக அளவு கல்வி கற்று வெளி நாடுகளுக்கும் வேலைக்குச் செல்கின்றனர். மேலும் இன்றைய இளம் பட்டதாரிகளாகவும், சுயதொழில் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.”[6]

நாகரிகம் வளர்ந்துவிட்ட இந்த காலகட்டங்களில் அரசு உதவி நலத்திட்டங்கள் காலகட்டங் அனைத்தும் நலச்சங்கத்தின் மூலமாக மக்களுக்கு வந்து சேர்கிறது. இன்று இருளர் பெண்களுக்கு என்று ஒவ்வொரு மந்திற்கும் பல சரக்கு வைக்கும் இடத்தை அமைத்துக் கொடுத்து பெண்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மகளிர் குழு ஒன்றை அரம்பித்து சுயதொழிலைக் கற்று, அவர்களாகவே விற்று பொருளாதாரத்தை சீர் செய்து கொள்கின்றனர். இவை இன்றைய நவீன காலகட்டங்களில் இருளர் பெண்களில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

**விருந்தினர் உபசரிப்பு முறை**

இருளர் இன மக்கள் தங்கள் வீடுகளுக்கு வரும் இருளர் இன விருந்தினர்களைச் சிறப்பான முறையில் வரவேற்று உபசரிக்கின்றனர். வீட்டிற்கு வந்தவுடன் அமரச் செய்து மோர்கொடுத்து நல்ல முறையில் உபசரித்து அனுப்புகின்றனர். வேறு இன மக்களாகிய தமிழர் போன்றோர் வீட்டிற்கு வந்தாலும் பெரும்பாலும் அவர்களையும் உள்ளே அழைத்து அமரச் செய்கின்றனர். காப்பி, தேனீர், போன்றவற்றைப் பருகக் கொடுக்கின்றனர்.

திருமணத்திற்கு வரும் விருந்தினருக்கு வெற்றிலை பாக்கு கொடுக்கும் வழக்கம் உண்டு. இவர்கள் இந்த நவீன காலத்திற்குத் தகுந்தாற்போல பத்திரிக்கைகளும் கொடுக்கின்றனர். இருளர்கள் மட்டும் அல்லாது இவர்களுடன் பழகிய அனைத்து இன மக்களையும் திருமணம் மற்றும் பிறவிழாச் சமயங்களில் அழைக்கின்றனர்.

அதே போன்று முந்திய கால கட்டங்களில் திருமணத்திற்குச் சீர்வரிசையாக பெண்ணிற்கு எருமைகளை கொடுத்தனர். இன்றும் இந்த வழக்கம் அவர்களிடம் உள்ளது என்றே கூறலாம். மேலும் இன்றைய காலத்திற்கு ஏற்றாற் போல் தங்கம், வெள;ளி, ஆபரணங்களை கொடுத்து அனுப்புகின்றனர். அன்று முதல் இன்று வரை எந்த சூழலிலும் ஆண்கள் பெண்கள் சீர்வரிசையாக எதுவும் கேட்டுப் பெறுவதில்லை. பெண் வீட்டாரின் விருப்பத்திற்குத் தகுந்தாற் போலவே அவர்கள் கொடுத்து அனுப்புகின்றனர்.

**முடிவுரை**

இருளர்களின் இளந்தலைமுறையினர் படிக்கும் ஆர்வம் கொண்டுள்ளனர். அரசினரால் ஏற்படுத்தப்பட்ட உண்டு, உறைவிடப்பள்ளி இதற்கு உதவிகரமாக இருக்கிறது. ஆயினும், மேற்படிப்புக்கும் இவ்வித உதவி இன்மையால் பெரிய பட்டப்படிப்பு போன்ற கல்விநிலை பெற வாய்ப்பில்லாமல் உள்ளனர். இதன் மூலம் இவர்களின் வாழ்வில் இன்னும் முழுமையான முன்னேற்றங்கள் உருவாகவில்லை என்றும் கூறலாம்.

**தகவலாளகள் பட்டியல்**

1. நாவா நீலகிரி ஆதிவாசி நலச்சங்கம், கோத்தகிரி.
2. இன்பசின், 42 வயது.
3. போதலி குட்டன், 66 வயது.
4. ராஜ்கிளி, 49 வயது.
5. சிட்டு முத்து, 28 வயது.

**துணைநூற் பட்டியல்**

ஹார்ட்மன், ஹெட்டி, சித்திரலேகா, மார்க்கிசீயமும் பெண்நிலைவாதமும், மௌனகுரு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு, 1999.

*****